முதன்மை மாவட்ட நீதிமன்றம், திருச்சிராப்பள்ளி.

O.S. No.170/2013

25.06.2019

வா.சா.1 : பெயர் :பாலகுமார்

மேற்படி சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு சத்தியப் பிரமாணம் செய்விக்கப்பட்டு பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய அனுமதிக்கப்படுகிறார்.

7, 8 பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை :

வழக்குரைக்கான விபரங்களை வழக்கறிஞரிடம் நான் தான் சொன்னேன். வழக்குரையில் உள்ள விபரங்களை படித்து பார்த்து கையெழுத்து போட்டேன். வழக்குரையில் 7,8 பிரதிவாதிகள் ஏதேனும் தவறு செய்தார்கள் என்று குறிப்பாக குற்றச்சாட்டுக்கள் சொல்லப்பட்டுள்ளதா என்றால் இல்லை. நான் தாக்கல் செய்துள்ள பதில் உரையிலும் 7,8 பிரதிவாதிகள் மீது எந்த குற்றச்சாட்டும் சொல்லவில்லை என்றால் தனிப்பட்ட முறையில் சொல்லவில்லை. 7,8 பிரதிவாதிகளுக்கு எதிராக எனக்கு எந்த பரிகாரமும் கிடைக்கதக்கதல்ல என்றால் சரியல்ல. கல்லூரி நிறுவனங்களை 2 மற்றும் 3 பிரதிவாதிகள் தங்களுக்குள் பிரித்துக் கொண்டதாக காட்டுவதற்கு ஆவணம் உள்ளதா என்றால் உள்ளது. தாக்கல் செய்துள்ளேன். அதுபோன்ற ஆவணங்கள் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. 7 மற்றும் 8 ம் பிரதிவாதிகள் எவ்வாறு கூட்டு சதியில் ஈடுபட்டார்கள் என்று வழக்குரையில் சொல்லப்பட்டுள்ளதா என்றால் சொல்லியுள்ளேன். அதுபோன்று எந்த விபரமும் சொல்லவில்லை என்றும், வழக்கிற்காக தவறாக சாட்சியமளிக்கிறேன் என்றும் சொன்னால் சரியல்ல. 2, 3 ம் பிரதிவாதிகள் கூட்டாக தான் இருந்து வருகிறார்கள் என்றும், அவர்கள் நிறுவனங்களை பிரித்துக் கொண்டதாக தவறாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. 4 ம் பிரதிவாதியின் சுயநலத்திற்காக இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல.